2. கவன ஈர்ப்பு.

சேர்ந்தபூமங்கலம் விவசாயிகளிடமிருந்து உரக் கடன்கள் கெடுபிடி செய்து வசூலிக்கப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை திரு. ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் மாண்புமிகு உணவு, வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் வட்டத்திலுள்ள சேர்ந்தபூமங்கலம் விவசாயிகளிடமிருந்து அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட விவசாய உரக் கடன்களை (ஐ.எம்.எஸ். லோன்) அரசு அதிகாரிகள் கெடுபிடி செய்து வசூலிப்பதைப் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு, வருவாய் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Mr. Speaker, Sir, in January 1971 the Collector of Tirunelveli reported to Government among other things that Tiruchendur Taluk containing 46 villages was one of the worst affected Taluks and that in order to ease the strained economic conditions in the area, a 'go-slow policy' may be adopted in the collection of loan dues. The Collector also suggested that works might be udertaken to relieve the distress of the people in the area. The Board of Revenue recommended the Collector's proposals. Accordingly the Government informed the Collector of Tirunelveli that he could use his discretion and adopt a 'go-slow policy' in regard to collection of Government loan dues (both arrears and current) in the villages in Tiruchendur taluk. The above concession will be available till the end of the current fasli, i.e., 30—6—1971.

In the light of the above orders of the Government, the Collector of Tirunelveli would have issued instructions to his subordinates to adopt a 'go-slow policy' and not to resort to coercive process in genuine cases. Government also have sanctioned totally a sum of Rs. 8.08 lakhs for Tirunelveli District for deepening and sinking of drinking water wells.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, கடந்த வாரம் அங்கே உள்ள விவசாயிகளிடமிருந்து அதிகாரிகள் அந்த கடனுக்கான பாக்கியைக் கெடுபடி செய்து வசூலிக்கிறார்கள் என்று எனக்குத் தந்தி வந்திருக்கிறது. அங்கே கடன் வசூலிக்கும்போது, கடன்களைச் செலுத்த முடியாத மக்களிடமிருந்து பாத்திரங்களை எடுத்துச் சென்றதாகவும் தந்தி வந்திருக்கிறது. இனி மேலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படி வசூலிப்பதை சற்று தாமதப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உத்திரவிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நான் அளித்த பதிலில், சென்ற பசலியோடு அரசாங்கத்தின் ஆணை முடிந்து விட்டது என்று குறிப்பிட்டிருக்கிறேன். இந்தப் பசலிக்காக வசூல் செய்திருப்பார்கள். நிலைமையை மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்து, முடிவு எடுக்கப்படும்.